

AKpillai

முருகன் துணை.

# தேயிலை தோட்டப் பாட்டு.

இந்தியாநகர் சிங்காரம் நூதனமைனர் பாட்டு

கே. டி. வேணுகோபால் தாஸ்
டி. எம். ஜங்ஙபாபுசவ
அவகளால் இயற்றியது

இரண்டுபாகமும் அடங்கியது

கு. ஆ. கிருஷ்ணசாமி முதலியார்
அவர்களால்.
ஸ்ரீ-இராஜராஜேஸ்வரி பிரஸில்
பதிப்பிக்கபட்டது.
கும்பகோணம்.

ரிஜிஸ்டர் காபிரைட் 1928. விலை-அணா-1

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம

# தேயிலை தோட்டப் பாட்டு.



## இந்தியா நகர் சிங்காரம் நூதனமைனர் பாட்டு

கே. டி. வேணுகோபால் தாஸ்
டி. எம் ஜன்னபாடலர்
அவகளால் இயறறியது

இரண்டு பாகமும் அடங்கியது

கு. ஆ. கிருஷ்ணசாமிமுதலியார்
அவர்களால்
ஸ்ரீ-இராஜராஜேஸ்வரி பிரஸ்.
பதிப்பிக்கப்பட்டது
கும்பகோணம்

ரிஜிஸ்டர் காபிரைட். 1928 விலை-அணா-1

உ

சிவமயம்

# தேயிலை தோட்டப் பாட்டு.

(காப்புவெண்பா)

சீராரு செந்தமிழ்நகர் சிறப்பதனை யான்பாட
என் நேராக வருவாய் செல்வக் கணபதியே
சேவித்தேன்தன்கால்

சுப்பிரமணியர் தியானம்

(பழனியாண்டவனே என்றமெட்டு)

பல்லவி

சிவசுப்ரஹமண்யமே சிவமே
சிவசுப்ரஹமண்யமே இந்த
ஜெகமதிலதி விபரிதமொடு மக வெனபெரும்
உமை மகிழ்தரும் திகழ்சதுர்மறை முடிவதிலுரை
இக சுக துக அகமகிழ்தரும் சிவ)

அநுபல்லவி.

பவ வினை பொடி பட நட மிடும்
பருதி உதய வென வொளிர் தரும்
தவ விமலியர் சாற்றுந் திசைந்திடும்
தகைசேர் சிகிவாழ் சண்முக மகிபா குறமின் குஞ்சரி
தான்கொஞ்சும் தமிழ் சுந்தரனே வந்திங்கொருவரம்
தந்தாயக நீயெனவே துதியே புரிந்தேன் எனையாதரி சிவ

சரணம்

தருணம் மிதுவாரும் ஜாலம் வீண் செய்யாது
கருணையருளிய சுந்தையா மெய்யோது
வரமிடித்தவிற் றுளுவதெப்போது
வந்தெந்தன் கொடுந்துயாம் சிந்துந் தன் பதமலர்பெற
வாகை வேலையன் செய்யும் வாதுதாள் நாளுய்யும்
வாரும் நிறம் கூறும் மீறுது வடிவேலனே
வருவாய்தகி அடியேன் வெள்ளைச்சாமி துதி
சிவசுப்ரஹ்மண்யமே

(கரும்புத்தோட்டத்திலே—என்றமெட்டு.)

தேயிலை தோட்டத்திலே ஐயோ
தேயிலை தோட்டத்திலே பாரத சேய்கள்
சென்று சென்று மாள்கிறார் ஐஐயோ தேயி

ஓயாதநாள்முதலும் பல ஊழியம் செய்து
உடம்பு அலுத்தார் ஐயோ
நோயால் வருந்துகிறார் தேயி

கட்டத்துணியுமின்றி அந்தக்
காட்டினிலே செக்குமாட்டைப் போலுழைதது
அட்டை கொசுககடியால் சிறு
ஆடவா பெண்கள் அலரித்துடிக்கிறார் தேயி

ஓபாதவேலையினால் நெஞ்சம்
கலக்கப்குலரந்து பிரேக்கமடைகிறார் தே

நல்ல உணவுமின்றி ரெங்கோன்
நாத்தப்புழுத்தவழ் மூட்டையரிசியில்
கல்லுமண்ணுங்கலந்து கஞ்சி
காய்ச்சிக்குடிப்பதால் கக்ஷிச்செரிக்காமல்
ஒங்கும் வயர்பெருத்து குடல்
உள்ளேவலி கண்டு தொல்லையடைகிறார் தே

ஒன்றுபயமும்மில்லை அண்ணண்ணே
ஒன்றுபயமுப்மில்லை என்று
சொல்லி ஜனங்களைவற்றுறார் ஸ்டீமரில் தேயி

நேயரே கேளுமையா ஐஐயோ
நேயரே கேளுமையா வேலை
கஷ்டத்தினால்வேர்வை த்ரேகத்தில் வடியுமாம் தேயி

திங்க உணவுமில்லை அண்ணண்ணே
திங்கவுணவுமில்லை சிற்பி
சுண்ணாம்பு சாததனை உண்ணவும் தலைவிதியோ தேயி

பூரான் கொளவி சையான் ஐஐயோ
நட்டுவாகளி பூரான் கொளவி சையான் பொல்லா
பூச்சிக்கடிகளால் மாள்குரார் மானிடர் தேயி

மனிதர்களாய் பிறந்து அண்ணண்ணே
மனிதர்களாய் பிறந்து வாயில்லா
மாடுகளைப் போலே வாடுறார் ஐஐயோ தேயி

செந்தமிழ் சந்ததமே அண்ணண்ணே
செந்தமிழ் சந்ததமே சென்னை
பாலன் வேணுகோபால் ப்ாடினுன் ஐஐயோ தேயி

# தங்கரெத்தினம் பொன்னுரெத்தினம்

இந்தியா தேசத்திலிருக்குநம் நண்பரெல்லாம்
சந்தோஷத்தில் மூழ்க வந்துமே—தந்திரமாய்
கங்காணிமார்கள்செய்யும் கபடமெடுதுலைக்க
பங்கமிலா படைத்தோன் துணை.

1 பெண்ணே நவமணியே பிரியமுள்ள மாமயிலே
கண்ணே யென்கண்மணியே தங்கரெத்தினமே கண்டி
காப்பித்தோட்டம் கலைதலையக்கேளு பொன்னுரெத்தினமே

2 உத்துணர்ந்து பார்த்தாலல்லோ உண்மை விளங்குமடி
குற்றமில்லை யெள்ளளவும் தங்கரெத்தினமே நல்ல
குணமானகவர்மெண்டில் பொன்னுரெத்தினமே

3 மன்னுதிமன்னர்புகழ் மகிமையுள்ள ஆங்கிலேயர்
அன்பானயிந்தியா ஜனத்தை தங்கரெத்தினமே இந்த
அனியாயம் செய்யமாட்டார் பொன்னுரெத்தினமே

4 சிங்கப்பூர் பினாங்கு கண்டி செழிப்பான தேசமென்று
யெங்குமயிந்தியா ஜனத்தை தங்கரெத்தினமே கங்காணி
ஏமாற்றி கொண்டுபோறான் பொன்னுரெத்தினமே

5 தாயிதகப்பனைப்போல் தயாளகுணமாய்ப் பேசி
தேயிலைத்தோட்டத்திற்கு தங்கரெத்தினமே கங்காணி
திருட்டுத்தனமாய் கொண்டுபோறான் பொன்னுரெத்தினமே

6 கொள்ளையடிப்பதுபோல் குவலயத்தில் சிலஜனத்தை
கள்ளத்தனமாகப்பேசி தங்கரெத்தினமே கங்காணி
கபடமாக கொண்டுபோறான் பொன்னுரெத்தினமே

7 வாயில்லாஜீவனைப்போல் தேயிலைத்தோட்டத்திலே
நாயிபோல் கஷ்டப்பட தங்கரெத்தினமே கங்காணி
நாசமாபோவான் செய்றான் பொன்னுரெத்தினமே

8 பாதுகாத்திடுவேனென்று பத்தைந்து ரூபாதந்து
தோதுடனே கொண்டுபோயி தங்கரெத்தினமே ஜனத்தை
தொந்தரவுக் காளாக்குறான் பொன்னுரெத்தினமே

9 பெண்டுபிள்ளைகளுடன் பிரியத்தோடு போனோர்களை
உண்ணவுண்ண வில்லாமல் தங்கரெத்தினமே கங்காணி
ஓயாமல்வேலைவாங்கி பொன்னுரெத்தினமே

10 காப்பாற்று வேனென்றுசொல்லி காப்பித்தோட்டம்
(கொண்டுபோய்
சாப்பாட்டுக்கு கஷ்டப்பட தங்கரெத்தினமே கங்காணி
சண்டாளன் துரோகஞ்செய்கிறான் பொன்னுரெத்தினமே

11 பட்டபகல்தனிலே பாளடைந்த தோட்டத்திலே
அட்டைகடியினாலே தங்கரெத்தினமே ஜனங்கள்
அலறி துடிக்கிறாராம் பொன்னுரெத்தினமே

12 பத்துமாதம் சுமந்துபெத்ததாய் கண்ணால்கண்டால்
கத்துவாள் கதறுவாளே தங்கரெத்தினமே ஜனங்கள்
கன்றாவியை நேரிலேகண்டால் பொன்னுரெத்தினமே

13 பஞ்சமதிகமாச்சு பாவையரே வுலகத்திலே
சஞ்சலப்பட்டல்லோ தங்கரெத்தினமே
சம்பாதிக்கத் தோட்டஞ்சென்றார் பொன்னுரெத்தினமே

14 கப்பலேறி போனஜனம் கண்கலங்கும்படியாக
இப்படி செய்யலாமோ பொன்னுரெத்தினமே கங்காணி
இரக்கமில்லா படுபாவி பொன்னுரெத்தினமே

15 ஆசநேசபாசமிசு வாசமுள்ள நன்பரெல்லாம்
காசாலசையாலேயல்லோ தங்கரெத்தினமே கங்காணி
கையில்சிக்கி கலங்குறது பொன்னுரெததினமே

16 நால்லாயிருப்பானோ நாள்போக வாழுவானோ
எல்லோர்கள் சாபத்தினால் தங்கரெத்தினமே கங்காணி
என்னகெதிக் காளாவானோ பொன்னுரெத்தினமே

17 எல்லோரும் சொல்லுவது என்னமோ என்றிருந்தேன்
கல்லான மனமானாலும் தங்கரெத்தினமே இந்த
கதையைக்கேட்டால் கரைந்திடுமே பொன்னுரெத்தினமே

18 நல்லசுகமில்லாமல் நம்நாட்டு ஜனங்களெல்லாம்
பல்லைப்பல்லைக் காட்டுறாராம் தங்கரெத்தினமே பொல்லா
பாவிகங்காணிகளிடம் பொன்னுரெததினமே

19 மண்டலம்புகழுத்தக்க மகிலமையுள்ள திரிசையிலே
கண்டதெல்லாம் கண்காக்ஷியாம் தங்கரெத்தினமே பெரிய
கடைவீதி அலங்காரம் பொன்னுரெத்தினமே

20 இன்னொருபாகத்திலே யெடுத்துரைப்பேன் மாமயிலே
அன்பன் டி எம் ஜன்னப்பா தங்கரெத்தினமேமெட்டில்
அலங்காரமாய் பாடலானேன் பொன்னுரெத்தினமே

ஆண்டிபண்டாரம்வர்ண மெட்டு.

இந்தியா ஒய்யாரம் சொன்னால்
எங்கும் கெம்பீரம் பேஷ் பேஷ் (இந்)

பாவலர்கள் போற்றுமிந்த பாண்டியநகர் தனிலே
பார்க்க விநோதகங்களும் பலவிதமான செய்கைகளும்
ஜோதியாய்தான் விளங்கும் சோக்கர் நகர்தனிலே
ஜோக்காக மைனர்செய்யும் சொகுசதனையெடுத்துரைப்பேன் இ

சேனுடர் போற்றுமிந்த இந்தியா நகர் தனிலே
கோணக்கிராப்புகளும் கோட்டுகாலர் பூட்ஸ்களும் இ

சிலக்குட்டை போடலாச்சு செண்டுகளை பூசலாச்சு
பிடிசுருட்டுபோச்சு பெருமையான சிகரேட்டாச்சு இ

சபிட்டுகிராப்பு வெட்டி சபிசுக்கேற்ற சர்ட்டுமாட்டி
செந்தமிழ் படிப்புமபோச்சு டேம்பிலடிபகர் இங்கிலீஸலாச்சு இ

விபூதிநாமம்போச்சு விகசிதமான பொட்டுகளாச்சு
சீமான்கள் நெற்றியில்தான் சிகப்புகருப்பு சாந்துண்டாச்சு இ

வாஸிலைபன்டாட்டில்வாங்கி வாரிதலை சீவுதற்கு
எடுப்பார் கைதனில் சீப்புளைத்துமயிர் வகுப்பதற்க்கு இ

மூக்குகண்ணாடியாச்சு முன்னோர்கள் பாஷன்போச்சு
வாக்கிங் ஸ்டிக்கையிலெடுத்து வகையுடனே நடக்கலாச்சு இ

பி-ஏபிஎல் என்ற பட்டங்கல் பெருத்துபோச்சு
எப்படி பிழைப்போமென்று ஏங்குகின்றார் இந்தியாவிலே

உச்சிதலை குடுமிபோச்சு உள்ளமுகமாறலாச்சு
ஜெகமதில்தான் புகழ்ந்திட சீமைகிராப்பு சிறசிலாச்சு இ

அழகு கொண்டைகள்போச்சு அனர்த்தம்வந்து நேரலாச்சு
அறைக்கீரை தோட்டத்தைபோல் வளரவளர வெட்டலாச்சு

இந்தியாவில் கட்டிங்சலோன் மகிமையாய காணுதுபார்
அறைநாணுசவரம்போச்சு ஆப்ரூபீஸ் பணம்கேட்கலாச்சு

வண்ணார்தொழிலும்போச்சு வாஷிங்கம்பனியதிகமாச்சு
அர்ஜண்ட் ஆட்ரி பெயருண்டாச்சு புதுமையாக காணலாச்சு

செண்டுகளை வாங்கிடுவார் சிங்காரமாய் பூசிக்கொள்வார்
ஷோக்காக சினிமாவில் ஜோடியுடன் சென்றிடுவார்

நாட்டின் வலமைபோச்சு நாகரீகமதிகமாச்சு
கலிகால மகிமையாச்சு காணஒப்பன் கோட்டுண்டாச்சு

கும்பகோணத்தில் ஒட்டல்களும் மகிமையாய் காணுதுபார்
குலோப்சான் சாங்கரி கேசரி டயிட்டல் மிக்கஒருபத்துபோச்சு

ஆண்மீசைதானும்போச்சு அறைமீசை அதிகமாச்சு
சார்லியென்னும் பேருண்டாசசு ஜகமதிலே புதுமையாச்சு

வீட்டுக்கொரு மோட்டாராச்சி விகசிதமான சைக்கிலாசசி
ஜட்காமாட்டுவண்டிபோச்சி மோட்டார் பஸ்பெருத்துபோச்சி

காரைக்குடி தேவகோட்டை கண்டனூர் கன்றுவிபேட்டை
பலவித வூர்களுக்குபோகும் மோட்டார் அதிசயம்பார்

நாலணா கொடுக்கலாச்சி நாடகங்கள் பாக்கலாச்சி
கண்கள் விழிக்கலாச்சி காலே வேலே நிற்க்கலாச்சி

முன்னோர்கள் பெரியோரென்ற பயமும் துலைந்துபோச்சி
மைனர்கள்வாய்தனிலே மகிமை எலிபென்ட்சிகரட்டாச்

பனைவோலே எழுத்தாணி பாரினில்மறந்துபோச்
பணக்காரர் கணக்செழுத பவுண்டிங்பென் பேப்பராச்

கலிகால விபரீதத்தை கனவான்கள் காணவேண்டி
கண்டு எழுதலுற்றேன் கருததுடனே படித்திடுவீர்

நமஸ்காரம் செய்யும்நல்ல நாளெல்லாம் மறந்துபோச்
கமான் குட்வீனிங் எனக்கை தலையிலடித்துக் கொள்ளலாச்

சென்னை வண்ணையம்பதின் செப்பும் சிறுவன் ஆதி
வேணுகோபாலன்பாடிகும்பகோணம் ஜனங்களதேமாய் கூடி

(செந்தாளம்பூ என்ற மெட்டு.)

ஜப்பான் ஜர்மன் தேசத்துமேலான இந்தியதேசமே
இவ்வூரில் கதரில்லையா
உடுப்பதற்கு மணமில்லையா
செப்பும் காலர்கோட்டு பூட்ஸ்கள்மாட்டி
லாட்டன் லெப்டன் என்று நடக்கச் சொல்லுமோ ஜப்பான்

ரெஸ்டு வாட்ச்சு சில்க்குஷர்ட்டு
சிகரேட்டு மணம் கேட்குமா
செவகாட்டிரி புக்குமல்லு சொன்னேன் காரிக்கன்மல்லு
கவலையுடனே அதனையுடுத்து
கனவான்களே நடப்பீர் ஜப்பான்

கிராப்புவெட்டும் கோட்மாட்டும்
ஸ்டிம்மனேக மாச்சுதே
மூக்குக்கண்ணாடியாச்சு முன்னோர்கள் பாஸன் போச்சு
பாரில் நடந்திடும் அய்தீகமதனை
பார்த்து எழுதினேன் பக்குவத்துடனே ஜப்பான்

கருப்வளையல் நாட்டுபுடவை
நாகரீகம் போச்சுதே
குங்குமமஞ்சளும்போச்சு ஜோரினதொருகாலயபோச்சு
சிகப்புபவுடர் சிறியோர்முதலாய்
பூசிக்கொண்டவர் திரியலாச்சு

கள்ளுசாட்டை பிராந்திகளும்
கலந்து குடிக்கலாச்சுதே
கட்லீஸ் கிட்னிஎன்றுமே கரிவகை தின்னலாச்சு
கருத்துடனதை ஒழித்திடுவீர் காந்திசொல்வாக்கியமமிர்தமென்பீர்

கும்பகோணம் நகரின் அதிசயமதை
பார்த்திடக் கண்காட்சியே
சென்னை வன்னையம்பதி சொன்னேன் சிறுவன்துதி
செகமதிலிந்த கவிபுகழ்ந்திட
செப்பும் வேணுகோபால் மகிழ்ந்திட

உலகமெங்கும் பிரசித்தி பெற்று கையாண்டுவரும்

# சிட்டுக்குருவி சத்தின்

# லேகியம். 40 நாள் 3-0-0

இதில் குணமில்லாவிடில் வாங்கினபணத்தை
வாபீஸ் செய்யப்படும்,

புருஷர்களுடைய நபும்ஸகம் அல்லது பேடித்தனமென்னும்
துக்ககரமான கொடியவியாதியை அடியோடு தொலைத்து சிற்றி
ன்ப சுகத்தை அவரவர் இஷ்டப்படி அனுபவிக்கச்செய்வதில்
இந்தச் சிட்டுக்குருவி சத்தின் லேகியமானது மிகச்சிறந்தது துரி
தஸ்கலிதம், சொர்ப்பனஸ்கலிதம், ஆண்குறி துவளல், மூத்திரமெ
ரிச்சல், மூத்திரத்தோடு விந்துவும் கலந்திறங்கல். பகுமூத்திரம் அ
தாவது அளவுக்கதிகமாயும் அடிக்கடி மூத்திரம் இரங்குதல் வெ
ள்ளை மஞ்சள்வெள்ளை முதலிய மேகவெட்டை சம்பந்தமானவியா
திகளை இந்தலேகியமானது பத்தேவேளையில் முழுதும் குணமாக்
கித் தளர்ந்து துவண்டு மெதுவுபட்ட நரம்புகளுக்கு மிகவுறுக்கே
ற்றிப் பொருக்க முடியாத புருஷ சக்தியைத்தருவதில் இதற்கு மி
ஞ்சின லேகியம் வேறொன்றில்லையென்று நாம் உறுதியாகச்சொல்
லுவோம் இளைத்த தேகத்தைப் புஷ்டியாக்கி நீர்த்து ஜலம்போலான
தாதுவைப்பிசின்போல் கெட்டிப்படுத்தி கைகால் ஓச்சல் இடுப்பு
விட்டுப்போதல் மூர்த்த ஸ்திரீகளினாலுண்டான கொருகு முதலி
யகொடிய வியாதிகளைக்கண்டித்து தேகத்துக்கு வலிவையும் முக
தேஜஸையும் தாதுபுஷ்டியையும் தந்து இழந்துபோன இல்லறசுக
த்தைத் திருப்பிக்கொடுப்பதில் இந்த சிட்டுக்குருவி லேகியமே மு
தன்மையானதென்பதை எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம்.

இதற்கு யாதொரு பத்தியமும் இல்லை

இழந்துபோன இல்லற சுகத்தை ஒருவன் மறுபடியும் அ
டையவேண்டுமானால் சிட்டுக்குருவி லேகியத்தையே புசிக்கவேண்
டும் தேவையானவர் அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதி பெற்று
க்கொள்க

40-நாள் டப்பி சேர் ரூ. 3—0—0 அரை சேர் ரூ. 2—0—0

## கு. ஆ. கிருஷ்ணசாமிமுதலியார்

சாரங்கபாணிசாமிகோவில் தெற்கு வடம்போக்கி தெரு

கும்பகோணம்.